UNITED NATIONS
SRI LANKA

20 ஆண்டு
24 அறிக்கை

2024 ஆம் ஆண்டு இலங்கைக்கு ஒரு முக்கிய ஆண்டாக அமைந்தது. இதற்கு அரசியல் மாற்றம், தொடர்ச்சியான பொருளாதார மீட்சி, மற்றும் நிலையான அபிவிருத்தியின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

2023–2027 ஒத்துழைப்பு கட்டமைப்பின் வழிகாட்டுதலின் பிரகாரம், 21 ஐ.நா. நிறுவனங்கள், அரசாங்கத்துடனும் உள்நாட்டு பங்காளிகளுடனும் இணைந்து, தேசிய முன்னுரிமைத் துறைகளில் பெறுபேறுகளை ஈட்டுவதற்கு ஒத்துழைப்பை வழங்கின.

## 2024 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் இலங்கை...

### சமூகப் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளை விரிவுபடுத்தியது

- ஊட்டச்சத்து குறைபாடுள்ள சுமார் **2.5** மில்லியன் மக்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்துத் துணை உணவுகள் வழங்கப்பட்டன.
- **230,000** பாடசாலைப் பிள்ளைகளுக்கு தினசரி சத்தான பாடசாலை உணவு வழங்கப்பட்டது.
- பாலின வன்முறையால் பாதிக்கப்பட்ட **9,000** பேர் ஆதரவைப் பெற்றுக்கொண்டனர்.
- **240,000** பேருக்கு பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதார வசதி கிடைத்தது.
- **1,000** உடல்நலப் பராமரிப்பு நிலையங்கள் WASH வசதிகள் மற்றும் தூய சக்தி மூலம் தரமுயர்த்தப்பட்டன.

### வாழ்வாதாரங்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தியது

- **318, 000** க்கு அதிகமான மக்கள் தொழில் பயிற்சியினால் பயனடைந்தனர்.
- **34, 000** தொழிலாளர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்திக் கொண்டனர்.
- **338** நுண், சிறிய, மற்றும் நடுத்தர வியாபாரங்களுக்கு பணியிடத்து பாதுகாப்பை மேம்படுத்த உதிவியளிக்கப்பட்டது.

### காலநிலை நடவடிக்கை மற்றும் சுற்றுச்சூழல் பேண்தகு தன்மையை முன்னேற்றியது

- **840,000** பேர் காலநிலைக்கு உகந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு வழிகாட்டப்பட்டனர்.
- விவசாய/மீனவ சமூகங்களைச் சேர்ந்த **21,000** மக்களுக்கு பேண்தகு தன்மையான நடைமுறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.
- **262** சூரிய மற்றும் தூய சக்தி அமைப்புகள் நிறுவப்பட்டன.

### ஆளுகை, நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்தியது

**160,000** மக்கள் நீதித்துறையை அணுகுவதற்கு சிறந்த வாய்ப்பைப் பெற்றனர்.

மனித கடத்தலை எதிர்த்துப் **போராட 700** அரச அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை **25,000** பேர் மேம்படுத்திக்காண்டனர்.

### சமூகஒற்றுமை மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்

**450** குடும்பங்கள்மீள்குடியமர்த்தப்பட்டதோடு, **1,000** க்கு மேற்பட்ட மீள நாடுதிரும்பியோருக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டன.

பாலினம், சுகாதாரம்மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்செய்ய சிவில் சமூகத்துக்கு உதவிவழங்கப்பட்டது.

வெறுப்புப்பேச்சு மற்றும் தவறான தகவல்களை எதிர்க்க**17** ஊடக அமைப்புகள் மற்றும் **23** சமூகசேவை அமைப்புகள் (CSOS) தயார்படுத்தப்பட்டன.

### பாலின சமத்துவத்தையும் மற்றும் பெண்களுக்கு வலுவூட்டுதலையும் முன்னெடுத்தது

முரண்பாடு முகாமைத்துவத்தில் 600 பெண் தலைவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

**11,000** பெண்கள், பிள்ளைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு நீதியை அணுகுவதற்கான வாய்ப்பு முன்னேற்றப்பட்டது.

பாதிக்கப்பட்டு தப்பிய ஆட்களுக்கு ஆதரவளிக்க பொலிஸ் நிலையங்களில் **7** அவசரகால காத்திருப்புப் பகுதிகள் நிறுவப்பட்டன.

## நிதியிடல் மற்றும் வழங்கல்

2024ல் இலங்கை ஐ.நா. 79.9 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்து, 83% பயன்முடிவு வீதத்தை பெற்றது.

**12%** அமுலாக்கம், கூட்டு நிகழ்ச்சியாக இருந்தது, இது அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைகளை பிரதிபலிக்கிறது.

**71%** ஐ.நா. வின் முயற்சிகள், திறனாற்றல் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப உதவியில் கவனம் செலுத்தியது. இவை அமைப்புகளின் நீண்டகால வலுப்படுத்துதல் மற்றும் தேசிய உரித்தாண்மை என்பவற்றை ஊக்குவிக்கும்.

இலங்கை ஐ.நா. வின் **SDG** நிதியம் 2024ஆம் ஆண்டில் வெறுப்பு பேச்சு, டிஜிட்டல் மாற்றம் மற்றும் சமூக ஒற்றுமை என்பன உள்ளிட்ட ஐ.நா.வின் சகல கூட்டு முதலீடுகளிலும் 75% ஐ ஆதரித்தது.

## 2025ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைகள்

### பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துதல்

MSME தொழில் முயற்சிகள் மற்றும் பசுமை நிதியிடலுக்கு ஆதரவளிக்கும் அதே சமயத்தில், உற்பத்தித்திறன், ஏற்றுமதிகள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலை அதிகரித்தல்.

### வறுமையைத் சமாளித்தல்

சமூகப் பாதுகாப்பை விவுபடுத்துதல், கிராமிய வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் அடிப்படைச் சேவைகளுக்கு நியாயமான அணுகல் வாய்ப்பை உறுதிப்படுத்துதல்.

### டிஜிட்டல் மாற்றத்தை உந்துதல்

டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் அரச சேவைகளை வலுப்படுத்துதல், இதில் சிவில் பதிவு அமைப்பின் அறிமுகமும் உட்படும்.

### பேண்தகு தன்மை, அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் சமூக ஒற்றுமையை முன்னெடுத்தல்

குறிப்பாக, வரலாற்று ரீதியில் பின்தங்கிய பிரதேசங்களில் சமாதானம், மனித உரிமைகள் மற்றும் காலநிலை தாங்குதிறனை ஊக்குவித்தல்.

© United Nations in Sri Lanka

United Nations | Office of the UN Resident Coordinator
202-204, Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka
+94 (11) 2583805
rcs-srilanka@un.org | srilanka.un.org

அறிக்கையைப் பதிவிறக்கவும்